**சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்குநர் அவர்களின் செயல் முறைகள்**
**முன்னிலை : முனைவர்.சி.உஷாராணி, எம்.எஸ்ஸி., பி.எட்., பி.எச்.டி.,**
**இயக்குநர்**

**ந.க.எண். 062376 /பி1/2019** **நாள் : 29.01.2020**

**பொருள்:** பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு மார்ச் 2020 – பள்ளி மாணாக்கர்கள் மற்றும் தனித்தேர்வர்கள் (சிறப்பு அனுமதி திட்டத்தில் விண்ணப்பித்த தனித்தேர்வர்கள் உட்பட) அறிவியல் பாட செய்முறைத் தேர்வு நடத்துதல், மதிப்பெண் பட்டியல் பதிவிறக்கம் (Download) செய்தல் மற்றும் சில அறிவுரைகள் வழங்குதல் – சார்ந்து.

******

**ஆணை:**

நடைபெறவிருக்கும் மார்ச் 2020 பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வெழுதவுள்ள மாணாக்கர்களுக்கு (பள்ளி மற்றும் தனித்தேர்வர்கள், சிறப்பு அனுமதி திட்டத்தில் விண்ணப்பிக்கும் தனித்தேர்வர்கள் உட்பட) அறிவியல் செய்முறைத் தேர்வுகளை **21.02.2020 முதல் 28.02.2020 வரை** நடத்திட, அனைத்து பள்ளித் தலைமையாசிரியர்கள்/முதல்வர்களுக்கு கீழ்க்கண்டவாறு அறிவுரை வழங்கப்படுகிறது.

கீழ்க்குறிப்பிட்டுள்ள கால அட்டவணை மற்றும் அறிவுரைகளைப் பின்பற்றி செய்முறைத் தேர்வுக்கான அனைத்துப் பணிகளையும் முடித்திட அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்படுகிறது.

## SSLC MARCH 2020 PRACTICAL EXAMINATION SCHEDULE

### For Regular Candidates

| | |
|---|---|
| Empty Mark Sheets for Practical Exam with Register Number downloading from (for regular candidates) | **19.02.2020 to 28.02.2020** |
| Practical Examination to be conducted | **21.02.2020 to 28.02.2020** |

### For Private Candidates

| | |
|---|---|
| Hall Ticket Download | **25.02.2020 After Noon Onwards** |
| Practical Examination to be conducted | **26.02.2020 to 28.02.2020** |

### Regular & Private Candidates

| | |
|---|---|
| Mark Sheet to be submitted to DEO & Practical Exempted Candidate Letter & List | **On or Before 03.03.2020** |
| Online entry of Marks by DEO for both regular & Private Candidates | **26.02.2020 to 05.03.2020** |

அறிவியல் செய்முறைத் தேர்விற்கான மதிப்பெண் பட்டியல் தயாரிக்கும் மென்பொருள் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் வெளியிடப்பட உள்ளது.

1. **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் சென்று **Click to access Online Portal என்ற Option-ஐ Click செய்யவும்.**
2. SSLC MARCH 2020 எனத் தோன்றும் பகுதியை **Click** செய்யவும்.
3. தங்களது பள்ளியின் **User ID மற்றும் Password-ஐ Type செய்து Sign In என்ற Option-ஐ Click செய்யவும்.**
4. **SSLC MARCH 2020 SCIENCE PRACTICAL BATCH ALLOTMENT** என்ற பகுதியினை **Click** செய்யவும்.
5. **Mark Sheet** என்ற **Option**-ஐ **Click** செய்தால் **Practical** தேர்வுக்கான மதிப்பெண் பட்டியல் **Download** ஆகும். அதனை **Printout** எடுத்துக் கொள்ளவும்.
6. **Download Attendance Sheet** என்ற பகுதியை **Click** செய்தால் **Attendance Sheet Download** ஆகும். இதனை தேர்வின்போது மாணவர்களிடம் கையொப்பம் பெற பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.
7. இதனை அடிப்படையாகக் கொண்டு செய்முறைத் தேர்விற்கு மாணவர்களை அனுமதித்திடல் வேண்டும்.

## தனித்தேர்வர்களுக்கான செய்முறைத் தேர்வு நடத்துவதற்கான அறிவுரைகள்

1. **தனித்தேர்வர்கள் அறிவியல்பாட செய்முறைப் பயிற்சி பெற்ற அப்பள்ளிகளிலேயே செய்முறைத் தேர்வெழுத வேண்டுமென தனித்தேர்வர்களுக்கான தேர்வுக்கூட நுழைவுச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.**
2. எனவே தங்கள் ஆளுகைக்குட்பட்ட செய்முறைப் பயிற்சி அளித்த பள்ளிகளின் தலைமையாசிரியர்களை தனித்தேர்வர்கள் அணுகும்போது, செய்முறைத்தேர்வு நடைபெறும் தேதியினை தெரிவிக்குமாறும், பள்ளி மாணவர்களுக்கு செய்முறைத் தேர்வு நடைபெறும் நாட்களிலேயே ஏதாவது ஓரிரு நாட்களில் தவறாமல் தேர்வினை நடத்தி, மதிப்பெண் பட்டியல்களை தங்கள் வசம் ஒப்படைக்குமாறு, உரிய அறிவுரைகளை வழங்குமாறு அறிவுறுத்தப்படுகிறது.
3. தனித்தேர்வர்களை பொறுத்தவரை இத்துடன் இணைக்கப்பட்டுள்ள வெற்று மதிப்பெண் பட்டியலில் அந்தந்த தலைமையாசிரியர்கள் அறிவியல் செய்முறைத் தேர்விற்கு வருகைப்புரியும் தனித்தேர்வர்களின் பதிவெண்களை தங்கள் அளவிலேயே பதிதல் வேண்டும்.

## பொதுவான அறிவுரைகள்

ஒரு பெயர்பட்டியலில் காணப்படும் தேர்வர்கள், வெவ்வேறு செய்முறைத் தேர்வு மையங்களுக்குத் தொடர்பு உடையவர்களாக இருந்தால், பெயர்ப்பட்டியலை நகல் எடுத்து சம்பந்தப்பட்ட பள்ளி தலைமையாசிரியர்களுக்கு வழங்குதல் வேண்டும்.

செய்முறைத் தேர்வுகள் நடைபெறும் மையங்கள்/நாட்கள் குறித்த விவரத்தினை தனித்தேர்வர்கள் தங்கள் அலுவலகத்தை அணுகும்போது உரிய அறிவுரைகளையும், விவரங்களையும் தெரிவிக்க வேண்டும்.

செய்முறைத் தேர்வு முடிவுற்ற பின்னர் தங்கள் ஆளுகைக்குட்பட்ட அனைத்து பள்ளிகளிலிருந்தும் (பள்ளி மாணாக்கர் மற்றும் தனித்தேர்வர்களின்) செய்முறை மதிப்பெண் பட்டியல்களை **03.03.2020–க்குள்** பெறவேண்டும்.

அனைத்து பள்ளிகளிலிருந்து (பள்ளி மாணாக்கர் மற்றும் தனித்தேர்வர்களின்) மதிப்பெண் பட்டியல் பெறப்பட்டவுடன் மாவட்டக் கல்வி அலுவலகம் மூலமாக **On Line-ல்** பதிவேற்றம் செய்திடவேண்டும். இப்பணி **26.02.2020–ல் தொடங்கி 05.03.2020–க்குள்** முடிக்கப்பட வேண்டும்.

**On Line** மூலமாக மதிப்பெண்களை பதிவேற்றம் செய்த பின்னர், அறிவியல் செய்முறைத்தேர்வு விடைத்தாள் கட்டுகளை (Science Practical Answer Sheets) தங்கள் அலுவலகத்திலேயே பாதுகாப்பாக வைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் மாவட்டத்திலுள்ள பள்ளி மாணவர்கள் அனைவரது செய்முறைத் தேர்வு மதிப்பெண்களும் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளதா என்பதை மாவட்டக் கல்வி அலுவலர் உறுதி செய்து கொள்ளவேண்டும். எந்த ஒரு மாணவரது மதிப்பெண்களும் பதிவேற்றம் செய்யப்படாமல் இருத்தல் கூடாது.

அறிவியல் செய்முறைத் தேர்வு மதிப்பெண்கள் பதிவேற்றம் செய்யும் பணி முடிவுற்றவுடன், மதிப்பெண் பட்டியல்களை சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகத்தில் உடன் ஒப்படைக்குமாறு, அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இறுதியாக இத்துடன் இணைக்கப்பட்டுள்ள சான்றிதழை பூர்த்தி செய்து மாவட்டக் கல்வி அலுவலரின் அலுவலக முத்திரையுடன் மாவட்டக் கல்வி அலுவலர் கையொப்பமிட்டு, அச்சான்றிதழை **10.03.2020–க்குள்** இவ்வலுவலகத்திற்கு அனுப்பிவைக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

மேற்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளை தவறாமல் பின்பற்றி உரிய முறையில் திட்டமிட்டு, இத்தேர்வினை தனிக்கவனம் செலுத்தி எந்தப் புகாருக்கும் இடமளிக்காமல் சிறப்பாக நடைபெறும் வண்ணம் நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மாவட்ட / முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/–
இயக்குநர்

**இணைப்பு :** மேற்கூறியவாறு, செய்முறைத் தேர்வு நடத்துதல் சார்பான அறிவுரைகள் மற்றும் வெற்று மதிப்பெண் படிவம்.

**பெறுநர்:**

1. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்
2. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்
3. இணை இயக்குநர் (கல்வி), பாண்டிச்சேரி
4. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்

**SSLC PRIVATE CANDIDATE – PRACTICAL EXAMINATON MARKSHEET, MARCH 2020**

**Practical :**

**Practical Centre Name :** **Exam Date :**

**Medium :** **Batch ID :**

| SL. No. | REGISTER NO. | INTERNAL ASSESSMENT MARK | EXTERNAL ASSESSMENT MARK | TOTAL |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

Total Candidate Allotted : [ ] Present : [ ] Absent : [ ]

Certify that both Internal and External Mark for each Candidate have been Correctly totalled and entered.

**Signature of the Internal Examiner with School Seal**

**Signature of the External Examiner with Official Designation & Address**

**Signature of the Chief Superintendent with School Seal**

மாவட்டக் கல்வி அலுவலகம்

# சான்றிதழ்

---------------------- கல்வி மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து வகைப் பள்ளிகளைச் சார்ந்த மாணவர்கள் மற்றும் தகுதி வாய்ந்த தனித்தேர்வர்களின் (எவரும் விடுபடாமல்) அறிவியல் செய்முறைத் தேர்வு மதிப்பெண்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுவிட்டன எனச் சான்றளிக்கிறேன்.

தேதியுடன் கூடிய கையொப்பம்
மாவட்ட கல்வி அலுவலர்

தேதி :

இடம் :